# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்
# பல்வகை மனு எண் 2/2019
# அசல் வழக்கு எண்.13/2005

2019 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 07-ம் நாள் சனி கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.1 அபுல்கலாம் ஆசாத் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா 3 இனச் சொத்துக்களும் என் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் கூட்டாக கிரயம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரயம் செய்வதற்கு முன்போ, பின்போ சொத்தை அபிவிருத்தி செய்வதற்கு நான் எவ்வளவு முதல் போட வேண்டும், என் அண்ணன் எவ்வளவு முதல் போட வேண்டும் என்று எழுத்து மூலமான ஒப்பந்தம் எதுவும் இல்லை. எழுத்து மூலமான ஒப்பந்தம் எதுவும் இல்லாத நிலையில் சொத்தை அபிவிருத்தி செய்ததும், அதிலிருந்து வரும் வருமானமும் ஆளுக்கு தலா பாதி என்று அனுமானம் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாளது தேதி வரை நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். அதனால் 42,00,000/- க்கு வட்டி கொடுக்க தேவையில்லை என்று அனுமானிக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா 3 இனச் சொத்தில் கல்யாண மண்டபம் இருக்கிறது என்றால் சரிதான். 1 வது இனச் சொத்தில் ஒரு தளத்திற்கு 2 ஆயிரம் சதுர அடி கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது, அதில் 3 தளங்கள் அதுபோல உள்ளது என்றால் சரிதான். தாவா 1 வது இனச் சொத்து என் அனுபவத்தில் தான் உள்ளது. அதில் 2 ஆயிரம் சதுர அடியில் சமீப காலமாக குடியிருக்கிறேன். 4 ஆயிரம் சதுர அடி வாடகைக்கு விட்டிருக்கிறேன். ஏற்கெனவே அரசாங்கத்திற்கு வாடகை விட்ட வகையில் எவ்வளவு வருமானம் வந்தது என்று ஞாபகமில்லை. தற்போது 2 ஆயிரம் சதுர அடிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 19,000/- வாடகைக்கு விட்டிருக்கிறேன். மீதி 2 ஆயிரம் சதுர அடிக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 19,000/- வாடகைக்கு விட்டிருக்கிறேன். 1 வது இனச் சொத்தின் தற்போது மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அதன் மதிப்பு ரூபாய் 1 கோடிக்கு

மேல் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. திருமணத்திற்கு திருமண மண்டப வாடகை இன்றைய நிலவரப்படி ரூபாய் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை வசூலிக்கப்படுகிறது. 2004 ஜுன் மாதம் திருமண மண்டபம் கட்டி திறப்பு விழா செய்யப்பட்டது. 2006 முதல் திருமண மண்பத்தின் வருமானம் முழுவதையும் நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். 2 வது இனச் சொத்தை நானும், எனது அண்ணனும் முழுமையாக விற்றுவிட்டோம் என்றால் சரிதான். 2 வது இனச் சொத்து 2 தளங்கள் கொண்டது. அது 2,900 சதுர அடி கொண்டது என்றால் நினைவில்லை. அந்த சொத்தை எவ்வளவுக்கு விற்றோம் என்றால் பத்திரத்தை பார்த்துதான் சொல்ல முடியும். அந்த சொத்தை 64,50,000/- க்கு விற்றோம் என்றால் சரியல்ல, அதை கொண்டு தான் வங்கி கடன் அடைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது அண்ணனும், தாய் மாமாவும் மோசடியாக கையெழுத்து போட்டு ஒரு பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் எழுதிக் கொண்டுள்ளார்கள் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாய் மாமா சௌகத் அலி மோசடியாக கையெழுத்து போட்டு ஒரு பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரம் எழுதிக் கொண்டுள்ளார்கள் என்று குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் கணக்கு கேட்டு சிவில் வழக்கு போட்டுள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சௌகத் அலிக்கு எழுதிக் கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து செய்வதாக ஒரு பத்திரம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். கணக்கு கேட்டு தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிகள் மீது குற்ற நடவடிக்கை எடுக்க போவதில்லை, நான் மன்னித்து விடுகிறேன் என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்று ஞாபகமில்லை. என் அண்ணன் எனக்கு ரூபாய் 42 லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அதுதான சமரச தீர்வில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இதுசம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இரண்டு மேல் முறையீட்டு மனுக்களிலும் (ஏ.எஸ். 993/2009, 553/2017) 42 லட்சம் பொதுக்கடன் என்றும், 42 லட்சத்தை பொது சொத்தை விற்றும் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனது வழக்கறிஞரைத்தான் கேட்க வேண்டும். உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து எனது அண்ணன்தான் மீண்டும், மீண்டும் ரூபாய் 42 லட்சத்தை தனிப்பட்ட முறையில் கொடுக்க வேண்டும் என்று நான் கோரியிருப்பது நீதிமன்றத்தை அவமதிப்பது என்றால் சரியல்ல. ஏற்கெனவே

தீர்மானிக்கப்பட்ட விவரத்தை நான் மீண்டும், மீண்டும் கோர முடியாது என்றாலும், அவ்வாறு கோர நான் தடை செய்யப்பட்டிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. குறிப்பாக மேற்கண்ட தீர்ப்பில் பத்தி 42,47,48,50,51,52,54,55,56,57,58,59,60 ஆகியவற்றில் பின்னிட்டு எந்த கோரிக்கையும் வைக்க கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. நான் வெளிநாடு செல்வதற்கு 3 வகையான பாஸ்போர்ட் எடுத்துள்ளேன் என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. ஒரு பாஸ்போர்ட் எண் 967776, அதில் பிறந்த தேதி 25.03.1958 என்றும், மற்றொரு பாஸ்போர்ட் எண் **A**2030564, அதில் பிறந்த தேதி 25.03.1958 என்றும், மூன்றாவது பாஸ்போர்ட் எண் **Q**114637, அதில் பிறந்த தேதி 25.03.1956 என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. நான்தான் இந்திய பாஸ்போர்ட் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டிருக்கிறேன் என்றாலும், என் மாமா சௌகத் அலியோ, என் அண்ணனோ, எந்த மோசடியிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது போல் உள்ளது. 1 வது பக்கத்தில் உள்ள கையெழுத்திற்கும், 2 வது பக்கத்தில் உள்ள கையெழுத்திற்கும், வித்தியாசம் உள்ளது. 3 வது பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.